மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) திறந்த வெளி மேல் தளத்தில் வைக்கோல் குவிக்கப்பட்டிருந்த இடத்துக்கு அருகில் அமைந்த புகைபோக்கியிலிருந்து வந்த தீப்பொறியால் இத் தீவிபத்து ஏற்பட்டதாகச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரும் சென்னை, காவலதுறை ஆணையாளரும் தெரிவித்துள்ளனர்.

திரு. கே. விநாயகம்: மாடிகள் வைத்த அந்தப் பகுதியிலே வாழும் அந்த மக்கள் அங்கெல்லாம் குறிப்பிட்ட இடத்திலேதான் வைக்கோல் போர் போட்டு வைக்க வேண்டுமென்று கார்ப்பொரேஷன் விதிகள் இருந்தும் மாடி மீது வைத்திருந்ததற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? கார்ப்பொரேஷன் அதிகாரிகள் அப்போதைக்கப்பொழுது கண்காணித்து வருகிறார்களா, இல்லையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்போதைக்கப்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவைகளைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஆனாலும் சிலயிடங்களில் அவைகளையும் மீறி இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன. மேல்மாடியிலே வைக்கோல் வைக்கப்பட்டிருந்தது மட்டுமல்ல, பக்கத்திலே வீட்டினுடைய புகைபோக்கிக் குழாயும் இருந்திருக்கிறது. அதன் வழியாகத் தீப்பொறி வைக்கோல் போரிலே பட்டுத்தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது.

திரு. கே. விநாயகம்: இறந்துபோன இந்த ஐந்து குழந்தைகளின் பெற்றோர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு அரசாங்கம் தந்ததா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் கவனிப்பதாகத் தெரிகிறது.

Representations received by Vigilance Commission

* 609 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether complaints and letters sent to the Vigilance Commission are being transferred by the Commission to the Departments concerned for disposal; and

(*b*) the details of the "follow up" work done by the Commission in such cases?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) எப்போதுமே அல்ல, ஆனால் 'பிடியாணை' யின்றி பிடிக்கத் தகா வழக்குகள் சம்பந்தப்பட்ட குற்றச் சாட்டுகள் மட்டும் அனுப்பப்படுகின்றன.

(இ) கடிதங்கள் 'முடிவு செய்யப்படுவதற்காக' சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டால், முறையீடுகளிலுள்ள குற்றச்சாட்டுகள் குறித்துத் தேவையான நடவடிக்கைகளை அந்தத் துறைகள் மேற்கொள்ளும். எனவே, இது குறித்து "தொடர் நடவடிக்கை"க்குத் தேவை எதுவுமில்லை.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, for streamlining the administration of the Vigilance organisation, the Vigilance Commission has sent some proposals to this Government and they are pending before this Government. In view of the prevalence of a large amount of mamuls and corruption in the various departments, may I request the Hon. Chief Minister to state whether the Govern-

ment have taken any action on the suggestions sent by the Vigilance Commission so far and if not, when action would be taken on that?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி அனுப்பும் அந்தத் தகவல்கள் மீது அவ்வப்பொழுது தேவைப்பட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட துறையின்மீது புகார் செய்யப்படும்பொழுது, அந்தப் புகாரைக் குறிப்பிட்ட துறைக்கு அனுப்பி பைசல் செய்வதைவிட, ஒழுக்கக் கண்காணிப்பு ஆணைக் குழுவோ அல்லது வேறு இலாக்காவோ பார்ப்பது பொருத்தமாக இராதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கூறப்படுகின்ற புகார்களின் தன்மையைப் பொறுத்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

THIRU T. MARTIN : Mr Speaker, Sir may I request the Hon. Chief Minister to state whether suggestions for reorganising the Vigilance Organisation have been sent by the Vigilance Commission to the Government and whether the Government have taken action on those suggestions and if not, when action would be taken on those suggesttions for streamlining the organisation?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் அதுபற்றி அளித்துள்ள அபிப்பிராயங்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அவர்களும் அபிப்பிராயங்கள் அளித்திருக்கிறார்கள். ஆனால் அந்த அபிப்பிராயங்களின் மீது அரசு நடவடிக்கை எடுப்பதா அல்லது வேறு முறையிலே செய்வதா எனபதைப் பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ஒழுக்கக் கண்காணிப்பு ஆணைக் குழுவால் பெறப்படும் முறையீடுகள் மீது அந்த முறையீடுகளைப் பெற்றவுடன் எந்த அதிகாரி தவறு செய்தாரோ அந்த அதிகாரியைப் பற்றிச் சம்பந்தப்பட்ட இலாக்காவிற்கு எழுதுகிறார்கள். இவர் இன்ன குற்றம் செயதிருக்கிறார், எனவே, இந்த இடத்திலிருந்தால் நடவடிக்கை எடுக்க முடியாது, உடனே வேறு நடவடிக்கை எடுங்கள் என்று இலாக்காவிற்கு அனுப்புகிறார்கள். உடனே இலாக்காவினர் அந்த இடத்தைவிட்டு 200, 250 மைல்களுக்கப்பால் மாற்றிவிடுகிறார்கள். அப்படி மாற்றாமல் உடனே சஸ்பெண்ட் செய்து, வழக்குத் தீரும்வரை சஸ்பெண்ட் செய்ய அரசாங்கம் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதில் வேலையிலிருந்து சஸ்பெண்ட் செய்யவைத்து விசாரணை செய்வதுஒரு முறை. சஸ்பெண்ட் செய்யாமலேயே அந்த வழக்கை விசாரணை செய்வது ஒருமுறை. இவை அவர்களின் மீது வந்துள்ள வழக்குகளின் தன்மையைப் பொறுத்து அரசு எடுத்துக் கொள்ளும் முறைகளாயிருக்கின்றன.

கூட்டுறவுத் துறை.

***610 வினு—திரு.என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் இதுகாறும் விவசாய இலாகாவுடன் இணைந்திருந்த கூட்டுறவு இலாகா தனியாகப் பிரிக்கப்பட்டுப் புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?